DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 113/2025**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 09th day of June 2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 1** | கிராமம் | : | பட்டிணம்காத்தான் |
| பெயர் | : | சங்கீதா | தாலுகா | : | இராமநாதபுரம் |
| க/பெ. | : | முருகராஜா | சமயம் | : | -- |
| வயது | : | 42 | ஜாதி | : | -- |
| தொழில் | : | டெய்லர் | | | |

நாள்: 09.06.2026
நேரம்:01.50

1, 2 எதிரிகள் ஆஜர்.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**முதன்மை விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் வசித்து டெய்லரிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் 1ம் எதிரி எனது கணவர், சுமார் 2 வருடங்களுக்கு நானும், எனது அம்மாவும் வெளியில் சென்றபோது, 1ம் எதிரி எனது கணவர் எனது மகனை பார்க்க சென்றுள்ளார். அப்போது நானும், எனது அம்மாவும் வீட்டிற்கு வந்தோம். அப்போது தகராறு ஏற்பட்டது. சந்தேகத்தின் பேரில் நான் காவல் நிலையம் சென்று சொன்னேன். போலிசார் எழுதி வைத்துக்கொண்டு என்னிடம் கையொப்பம் மட்டும் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார்மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆகும்**. நானும், 1ம் எதிரியான எனது கணவரும் தற்போது சேர்ந்து வாழ்ந்து வருகிறோம். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பு சாட்சி விசாரணையில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள சமரச மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். நானும், 1ம் எதிரியான எனது கணவரும் பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்றும், 28.08.2025ம் தேதி மாலை 18.00 மணியளவில் நானும், எனது அம்மாவும் சாமி கும்பிட சென்றபோது தனியாக இருந்த எனது மகன், மகளிடம் எதிரிகள் சென்று பேசி கொண்டிருந்தபோது, அருகில் உள்ள தொட்டியம்மாள் என்பவர் என்னிடம் சொன்னதால், நானும், எனது அம்மாவும் சென்று, எதிரிகளை பார்த்தபோது எங்களை மிரட்டி, கையை பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டார் என்றால் சரியல்ல. அப்போது அருகில் இருந்த தொட்டியம்மாளும், எனது மகனும் ஓடிவந்து விலக்கியபோது, எதிரிகள் இருவரும் எங்களை தீவைத்து கொளுத்திவிடுவதாக மிரட்டினார்கள் என்றால் சரியல்ல. அதன் பிறகு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு, 1ம் எதிரி எனது கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை**

**மறுவிசாரணை – இல்லை.**

CATHRENE JEBA SAKUNTHALA S

Digitally signed by CATHRENE JEBA SAKUNTHALA S
Date: 2026.06.09 16:54:57 +0530

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 113/2025**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 09th day of June 2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 2** | கிராமம் | : | பட்டிணம்காத்தான் |
| பெயர் | : | ஜெயலெட்சுமி | தாலுகா | : | இராமநாதபுரம் |
| க/பெ. | : | பாண்டி | சமயம் | : | -- |
| வயது | : | 59 | ஜாதி | : | -- |
| தொழில் | : | விவசாயம் | | | |

நாள்: 09.06.2026
நேரம்:02.00

1, 2 எதிரிகள் ஆஜர்.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

முதன்மை விசாரணை:

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது மகள். ஆஜர் 1ம் எதிரி எனது மருமகன்.அ.சா.1ம், 1ம் எதிரியும் தற்போது சேர்ந்து வாழ்ந்து வருகிறார்கள். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பு சாட்சி விசாரணையில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

எனது மகளும், 1ம் எதிரியான அவரது கணவரும் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்றும், 28.08.2025ம் தேதி மாலை 18.00 மணியளவில் நானும், எனது மகளும் சாமி கும்பிட சென்றபோது தனியாக இருந்த எனது பேரன், பேத்தியிடம் எதிரிகள் சென்று பேசி கொண்டிருந்தபோது, அருகில் உள்ள

தொட்டியம்மாள் என்பவர் எங்களிடம் சொன்னதால், நானும், எனது மகளும் சென்று, எதிரிகளை பார்த்தபோது எங்களை மிரட்டி, கையை பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டார் என்றால் சரியல்ல. அப்போது அருகில் இருந்த தொட்டியம்மாளும், எனது பேரனும் ஓடிவந்து விலக்கியபோது, எதிரிகள் இருவரும் எங்களை தீவைத்து கொளுத்திவிடுவதாக மிரட்டினார்கள் என்றால் சரியல்ல. அதன் பிறகு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு, 1 ம் எதிரி எனது மருமகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை**

**மறுவிசாரணை – இல்லை.**

CATHRENE JEBA SAKUNTHALA S

Digitally signed by CATHRENE JEBA SAKUNTHALA S
Date: 2026.06.09 16:55:14 +0530

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 113/2025**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 09th day of June 2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 3** | கிராமம் | : | மேலசோத்தூரணி |
| பெயர் | : | அர்ஜூணன் | தாலுகா | : | இராமநாதபுரம் |
| த/பெ. | : | முனியாண்டி | சமயம் | : | -- |
| வயது | : | 55 | ஜாதி | : | -- |
| தொழில் | : | கூலி வேலை | | | |

<u>நாள்: 09.06.2026</u>
<u>நேரம்:02.05</u>

1, 2 எதிரிகள் ஆஜர்.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

<u>முதன்மை விசாரணை:</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு நான் காவல் நிலையம் சென்றபோது, போலிசார் எழுதி வைத்துக்கொண்டு என்னிடம் கையொப்பம் மட்டும் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆகும்**. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பு சாட்சி விசாரணையில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

30.08.2025 ம் தேதி பகல் 1.15 மணிக்கு போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் என் முன்னிலையில்

தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதில் நானும், ராஜமாணிக்கம் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை**

**மறுவிசாரணை – இல்லை.**

CATHRENE JEBA SAKUNTHALA S

Digitally signed by CATHRENE JEBA SAKUNTHALA S
Date: 2026.06.09 16:55:34 +0530

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 113/2025**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 09th day of June 2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 4** | கிராமம் | : | இராமநாதபுரம் |
| பெயர் | : | காந்திமதி | தாலுகா | : | இராமநாதபுரம் |
| க/பெ. | : | சண்முகவேல் | சமயம் | : | -- |
| வயது | : | 55 | ஜாதி | : | -- |
| தொழில் | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் | | | |

<u>நாள்: 09.06.2026</u>
<u>நேரம்:02.10</u>

1, 2 எதிரிகள் ஆஜர்.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதன்மை விசாரணை:</u>**

நான் தற்போது கேணிக்கரை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கேணிக்கரை காவல் நிலைய குற்ற எண். 346/2025, சட்டப்பிரிவுகள் 329(4), 296(b). 115(2), 351(3) BNS & 4 of TNPHW Act-ன்கீழ் வழக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திரு.தங்கஈஸ்வரன், அவர்கள் தற்போது பணிமாறுதல் ஆகி வேறு காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறார். நான் கூடுதல் சாட்சியாக சேர்க்கப்பட்டு ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்

30.08.2025ம் தேதி பகல் 12.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் நிலைய பொறுப்பில் இ ருந்தபோது அ.சா.1 கொடுத்த புகார்மனுவை பெற்று நிலைய குற்ற எண். 346/2025, சட்டப்பிரிவுகள் 329(4), 296(b). 115(2), 351(3) BNS & 4 of TNPHW Act-ன்கீழ் வழக்கு பதிவு செய்து புகாரையும், முதல் தகவல் அறிக்கையையும் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். புகார்மனு அ.சா.ஆ.4 ஆகும்.**

இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜமாணிக்கம், அர்ஜுனன் ஆகியோர்களை விசாரணை செய்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.5 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகும்**. பின்பு சாட்சிகள் சங்கீதா, ஜெயலெட்சுமி, அபினாஸ், தொட்டியம்மாள், ராஜமாணிக்கம், அர்ஜுனன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு எதிரிகளை 30.8.2025 ம்தேதி வானக்காரதெரு லதா கிளினிக் அருகே வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்பு விசாரணையை முடித்து எதிரிகளுக்கு எதிராக அதே பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பு கு.வி:</u>**

சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் இவ்வழக்கின் விசாரணை அதிகாரி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கில் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சொன்னது போல் சொன்ன நேரத்தில் சார்பு ஆய்வாளர் அவர்கள் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. விசாரணை அதிகாரி சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

CATHRENE JEBA SAKUNTHALA S

Digitally signed by CATHRENE JEBA SAKUNTHALA S
Date: 2026.06.09 16:55:44 +0530